# SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

(தன்னாட்சி கல்லூரி)

## பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம்

## சிறப்பு மலர் - 2019




தமிழ்ப் பயன்பாட்டை மேம்படுத்தவும், கணித்தமிழ் விழிப்புணர்வு அளிக்கும் நோக்கிலும், மாணவர்கள் அறிவியல் தொழில் நுட்பங்களை எளிதில் புரிந்து கொள்ளவும், பல்வேறு துறையின் அறிவியல், தொழில் நுட்பக் கருத்துக்களைத் தமிழ் மொழியில் உருவாக்கப்பட்டு காலாண்டு இதழாக வெளிவரும் “பொறியறி” தொழில்நுட்பத் தமிழ் இதழ் வெளியிட்டு நிகழ்வு.

# SRM VALLIAMMAI ENGINEERING COLLEGE

Affiliated to Anna University, Chennai | Approved by AICTE
Accredited by NBA | 'A' Grade Accreditation by NAAC
ISO 9001:2015 Certified Institution

## Granted Autonomous Status By UGC & Anna University from 2019-20

## ADMISSIONS : 2019 - 20

### Courses Offered

### UNDER GRADUATE PROGRAMS

- B.E.- Agriculture Engg.
- B.E. - Medical Electronics
- B.E. - Civil Engg.
- B.E. - Computer Science and Engg.
- B.E. - Electronics & Communication Engg.
- B.E. - Electrical & Electronics Engg.
- B.E.- Electronics & Instrumentation Engg.
- B.E. - Mechanical Engg.
- B.Tech - Information Technology

### POST GRADUATE PROGRAMS

- M.E. - Industrial Safety Engg.
- M.E. - Power Systems Engg.
- M.E. - Control & Instrumentation Engg.
- M.E. - Communication Systems
- M.E. - Computer Science and Engg.
- M.E. - Structural Engg.
- Master of Business Administration



TNEA Counselling Code **1422**

www.srmvalliammai.ac.in

Mob: 9940036042, 43

srmvalliammai  SRM_VALLIAMMAI  srmvec_official

# அமைப்புக் குழு

## தலைமைப் புரவலர்கள்

டாக்டர் **தா.இரா. பாரிவேந்தர்**
நிறுவனர் & வேந்தர், SRM கல்விக்குழுமம்

திரு. **இரவி பச்சமுத்து**
தலைவர், SRM கல்விக்குழுமம்.

முனைவர் **ப. சத்தியநாராயணன்**
தலைவர், SRM அறிவியல் (ம) தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.

## முதன்மை அமைப்பாளர்கள்

முனைவர் **தி.பொ. கணேசன்**
இயக்குநர், SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரி,
இணைத் துணை வேந்தர்(P&D). SRM அறிவியல் (ம) தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.

முனைவர் **பா.சிதம்பரராஜன்**
முதல்வர், SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரி.

முனைவர் **ம. முருகன்**
துணை முதல்வர், SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரி.

## அமைப்பாளர்

முனைவர் **பா. வானதி**
பேராசிரியர் & துறைத்தலைவர், கணினி அறிவியல் பொறியியல் துறை, SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரி.

## ஒருங்கிணைப்பாளர்

திரு. **க. சண்முகம்**
உதவிப்பேராசிரியர், கணினி அறிவியல் பொறியியல் துறை, SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரி.

## ஆசிரியர்கள் குழு

திருமதி இரா. தேன்மொழி, உதவிப்பேராசிரியர், தகவல் தொழில் நுட்பத்துறை
திரு. ம. செல்வராஜ், உதவிப்பேராசிரியர், மின்னணுவியல் தொலைத் தொடர்புத்துறை
திரு. சு. வெங்கடேஷ், உதவிப்பேராசிரியர், மின்னியல் மின்னணுவியல் துறை
திரு. ச. பிரவின்குமார், உதவிப்பேராசிரியர், மின்னணுவியல் கருவியாக்கம் துறை
திரு. க. ஆறுமுகம், உதவிப்பேராசிரியர், இயந்திரவியல் துறை
திரு. க .வைத்தியநாதன், உதவிப்பேராசிரியர், குடிமுறை பொறியியல்துறை
திரு. ச. இராஜா, உதவிப்பேராசிரியர், மேலாண்மையியல்துறை
முனைவர் தா. ஸ்ரீதேவி, உதவிப்பேராசிரியர், பொதுப் பொறியியல்துறை
திருமதி மா. ஆர்த்தி, உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை

## மாணவர்கள் குழு

செல்வன் சு. இரத்தன கிரிதரன் (ஒருங்கிணைப்பாளர்)
செல்வன் கு. சங்கர தாஸ் (ஒருங்கிணைப்பாளர்)
செல்வன் க. சங்கர் பாபு (இணை ஒருங்கிணைப்பாளர்)
செல்வன் அ. அருண் குமார் (இணை ஒருங்கிணைப்பாளர்)

முனைவர் **தி.பொ. கணேசன்** அவர்கள்
இயக்குநர், SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரி
இணைத் துணைவேந்தர், SRMIST

## *வாழ்த்துரை*

உலகத் தரத்தில் உயர்கல்வி தருவதற்காக SRM கல்விக் குழுமத்தைத் தோற்றுவித்த மாண்பமை வேந்தர் டாக்டர் தா.இரா. பாரிவேந்தர் அவர்கள், தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகையிலும், மற்றும் நம் கல்விக்குழுமக் கல்லூரி மாணவர்களிடையே தமிழ்ப்பற்றையும் பண்பாட்டுப் பெருமையையும் உணர்த்துவதற்காகவும் உருவாக்கப்பட்டதுதான் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம்.

மாணவர்களின் பல்வேறு திறன்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை இம்மன்றம் வழங்கி வருவதை நான் நன்கு அறிவேன். அவர்களுடைய சாதனைகளையும், மன்றச் செயல்பாடுகளையும் மற்றும் அவர்களின் படைப்பாற்றலையும் அங்கீகரித்து உலகிற்கு உணர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்தச் சிறப்பு மலர் வெளிவர இருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்பமை வேந்தர் அவர்களின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் செயல்படும் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் அவரது நெறிகளின் வழி நின்று நீடு வாழ வேண்டும் என்பதே என் விருப்பம்.

பேராசிரியர்களும், மாணவர்களும் இணைந்து கூட்டு முயற்சியாகச் செய்யும் பல்வேறு மன்றச் செயல்பாடுகள், மேலும் மாணவர்கள் பங்கேற்கும் தமிழ் இலக்கிய நிகழ்வுகள் மூலம் எண்ணற்ற பல பேச்சாளர்களையும், எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் உருவாக்கி எதிர்காலத் தமிழகத்திற்கு அரிய பயன்களை விளைவிக்கும் என்று உறுதியாக நம்புகிறன்.

**தி.பொ. கணேசன்**
இயக்குநர்

முனைவர் **பா. சிதம்பரராஜன்** அவர்கள்
முதல்வர்
SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

## வாழ்த்துரை

பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம் செப்டம்பர் 3, 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கல்லூரியில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் மிகக் குறைவான மாணவர்களே உறுப்பினர்களாக இருந்தபோதும், கடந்த நான்கு ஆண்டுகளாக, பயிற்சியிலும் போட்டிகளில் பங்கேற்பதிலும் நிறைவாகவே இருந்து வருகின்றனர். பல போட்டிகளிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று தங்களை மெருகேற்றிக் கொண்டதோடு அல்லாமல் கல்லூரிக்கு தன்னம்பிக்கை நட்சத்திரமாக மிளிர்ந்தனர். பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் மென்மேலும் வளர வாழ்த்துக்கள். இத்தமிழ் மன்றத்தைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் ஆசிரியர் திரு. க. சண்முகத்துக்கு என் வாழ்த்துக்கள்.

**பா. சிதம்பரராஜன்**
முதல்வர்

முனைவர் **ம. முருகன்** அவர்கள்
துணை முதல்வர்
SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

# வாழ்த்துரை

SRM கல்விக்குழும மாணவர்களிடையே தமிழ் இலக்கிய படைப்பாற்றலையும், தனித்திறன்களையும் வளர்த்தெடுக்கும் வகையில் நமது SRM கல்விக்குழுமங்களின் நிறுவனத் தலைவர் மாண்பமை டாக்டர். பாரிவேந்தர் ஐயா அவர்களால் 03.09.2015 அன்று வள்ளியம்மை பொறியியல் கல்லூரியில் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் தொடங்கப்பட்டது. இதனை திருமிகு. இரவி பச்சமுத்து, தலைவர், SRM கல்விக்குழுமம், அவர்களின் வழிகாட்டுதலின்படி திறம்படச் செவ்வனே செயல்படுத்தி வருகிறோம்.

தமிழ்மன்றம் வாயிலாக, மாணவர்களுக்குப் பல்வேறு பயிற்சிப் பட்டறைகள் அமைத்து, தமிழ் இலக்கிய போட்டிகளான பேச்சுப்போட்டி, பட்டிமன்றம் ஆகியவற்றில் எவ்வாறு பேசுவது, கவிதை எவ்வாறு எழுதுவது எனப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு, மாணவக் கண்மணிகளை மாநில அளவில், மாவட்ட அளவில், மண்டல அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்வது, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைப்பது போன்ற நோக்கங்கள் மூலமாக நமது தாய்த்தமிழை வளர்ப்பது நமது தலையாய கடமையாகும்.

மேலும், இவ்வாறு கொடுக்கப்பட்ட பயிற்சிகளின் மூலம் நம் மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு, தனித்திறன்களை வெளிப்படுத்தி மாநில, மாவட்ட அளவில் பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளனர். இந்த வெற்றியைப் பதிவு செய்யும் விதமாக, “காணவே வந்தேன் - 2019” நிகழ்வில் சிறப்பு மலர் வெளியிட இருப்பதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மென்மேலும் பல படைப்பாற்றல் மிக்க மாணவர்களை இந்த மகத்தான மன்றம் உருவாக்கும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன். இதன் மூலம் நம்மாலான சிறு தொண்டினைத் தமிழுக்காகச் செய்துவரும் தமிழ்மன்ற உறுப்பினர்களுக்கும் அதன் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**ம. முருகன்**
துணை முதல்வர்

முனைவர் **பா. வானதி**
பேராசிரியர் & துறைத்தலைவர்
கணினி அறிவியல், பொறியியல் துறை

# வாழ்த்துரை

தமிழையும், தமிழ் மொழியின் மேன்மையையும் பேணிக்காக்கும் வகையில், நம் கல்விக்குழுமங்களின் நிறுவனத் தலைவர் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் ஐயா அவர்களால் உருவாக்கப்பட்டதுதான் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம்.

இம்மன்றம் தொடங்கிய நாள் முதல் பலரும் பாராட்டும் வண்ணம் பல அரிய செயல்பாடுகளையும் பல்வேறு விதமான போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளையும், பாராட்டுகளையும் மாணவர்கள் பெற்று வருகின்றனர் என்பதை நான் நன்கு அறிவேன்.

அவர்களின் வெற்றிப்பாதைகளை வரலாறு பேசும்வகையில், வரலாற்றுப் பதிவுகளாக இந்தச் சிறப்புமலரில் பதிவிட்டு, அதைக் காண கண் கோடி வேண்டும் என்ற வகையில் “காணவே வந்தேன் -2019” நிகழ்வில் வெளியிட இருப்பதை அறிந்து பெரிதும் மகிழ்கிறேன்.

மன்றத்தைச் சேர்ந்த மாணவக் கண்மணிகள் இன்னும் பல்வேறு விதமான படைப்பாற்றல்களை வெளியிடவும், பல்வேறு விதமான பரிசுகளை வென்றுவரவும் வாழ்த்தி, அதற்குப் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் என்றும் துணை நிற்கும் என்பதை மகிழ்வோடு பதிவு செய்கிறேன்.

**பா. வானதி**
துறைத்தலைவர்

# பார் போற்றும் பாரி வள்ளலின் மகத்தான மன்றம்

தாய்மொழியாம் தமிழ்மொழியின் மேன்மையையும், அதன் சிறப்பையும் போற்றிப் பேணிக் காக்கும்வகையிலும், SRM கல்விக்குழும மாணவ மணிகள் பைந்தமிழ்ப் பற்று மிக்கவர்களாகவும் ஆற்றல்கள் பல பெற்றவர்களாகவும் விளங்க வேண்டும் என்பதற்காக, 03.09.2015ஆம் ஆண்டு, நம் மாண்பமை வேந்தர் அவர்களால் உருவாக்கப்பட்டதுதான் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம்.

**கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி**

என்ற குறளுக்கேற்ப விளங்கும் நம் மாண்பமை வேந்தர் அவர்கள் எதிர் பார்க்கும் விதத்தில், நம் மாணவ மன்றம் இயங்கி வருகிறது என்பதற்கு நம் மாணவர்கள் பெற்றுள்ள பரிசுகளும் பாராட்டுகளும் சான்று.

நம் கல்லூரியின் முதல்வர் மற்றும் துணை முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் வீறுநடைபோட்டு வருகிறது என்பது அனைவரும் அறிந்ததே.

மாணவக் கண்மணிகளின் பரிசுகளையும், பாராட்டுகளையும் “காணவே வந்தேன்-2019” நிகழ்வில் சிறப்பு மலராக வெளியிட இருப்பதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வருங்காலத்தில் மாணவர்களின் தனித்திறன்களை மேம்படுத்தும் வகையில் இன்னும் பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளைப் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் மேற்கொள்ளும் என்பதை மகிழ்வோடு பதிவு செய்கிறோம்.

**க. சண்முகம்**
உதவிப்பேராசிரியர்
கணினி அறிவியல், பொறியியல் துறை
ஒருங்கிணைப்பாளர், பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம்



# தமிழக அரசின் தமிழ்வளர்ச்சித்துறை நடத்திய ஏழு நாள்

## இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை

நம் SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றத்தின் மூலம், மின்னணுவியல் தொடர்பியல் துறையின் இரண்டாமாண்டு மாணவர் க. சங்கர்பாபு அவர்கள், தமிழக அரசின் தமிழ்வளர்ச்சித்துறை நடத்திய ஏழு நாள்(18.08.19 முதல் 24.08.19 வரை) இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இந் நிகழ்வில் தமிழ் உலகின் அடையாளம், பாவேந்தர் கண்ட விளக்கு, வெள்ளித்திரையில் தமிழ், கம்பரசம், செய்திவாசிப்பு தொகுப்புக்கலை, உணவே மருந்து, தமிழின் சிறப்பு திரைப்பாடல் இலக்கியம், பழந்தமிழர் மருத்துவம், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை என இன்னும் பல தலைப்புகளில் தமிழ் அறிஞர்கள் மற்றும் கவிஞர்களின் முத்தான தகவல்களுடன் தமிழ் மழையில் நனைந்து தமிழ்ச் சுவையை ஊட்டும் விதமாக இந்நிகழ்வு அமைந்தது. இவரது கவிதை திறமைகளைப் பாராட்டி, இவருடைய கவிதைகளைத் தொகுத்தும் பதிப்பகச் செலவுகளை ஏற்றும், பொதிகைத் தமிழ்ச் சங்கம் புத்தகமாக வெளியிட்டு கொடுப்பதாக இந் நிகழ்வில் அறிவித்துள்ளது. இம் மாணவர்க்கு நம் கல்லூரியின் முதல்வர் துணை முதல்வர் துறைத் தலைவர் மற்றும் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளர் க. சண்முகம் ஆகியோர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.



# மாவட்ட அளவில் சாதனை
# பேச்சுப்போட்டியில் மூன்றாம் இடம்

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி துறையானது, கல்லூரி மாணவர்களுக்கிடையே, மாவட்ட அளவில் 09.08.19 அன்று நடத்திய பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப் போட்டி நிகழ்வில், பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் சார்பாக, நம் SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு மின்னணுவியல் தொடர்பியல் துறை மாணவர் க. சங்கர்பாபு பேச்சுப் போட்டியில் பங்கேற்று மூன்றாம் இடம் பெற்றுள்ளார். மேலும் கட்டுரைப் போட்டி நிகழ்வில் கணினி அறிவியல் பொறியியல் துறையின் இரண்டாம் ஆண்டு மாணவி ஜெ. தர்ஷினி பங்கேற்று இரண்டாம் இடம் பெற்றுள்ளார் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவர்களுக்கு பரிசுத் தொகையாக ரூபாய் 5,000 (மூன்றாம் இடம்) 7,000 (இரண்டாம் இடம்) மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை தமிழ்நாடு அரசின், தமிழ் வளர்ச்சித்துறை வழங்கிச் சிறப்பித்து என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இம் மாணவர்களுக்கு நம் கல்லூரியின் முதல்வர், துணைமுதல்வர், துறைத் தலைவர்கள் மற்றும் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளர் க. சண்முகம் ஆகியோர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.






# பாட்டுமன்றம்

SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றத்தின் மூலம், 73வது சுதந்திரதின விழாவையொட்டி 15.08.2019 அன்று காலை 9.45 மணியிலிருந்து 10.30 மணிவரை, 73 ஆண்டுகால சுதந்திரக் காற்றில் உருவான திரை இசைப் பாடல்கள், நம் சமுதாயத்தை சீர்ப்படுத்துகிறதா? சீரழிக்கிறதா? என்ற தலைப்பில் பாட்டுமன்றம் சிறப்பாக நடத்தப்பட்டது.

இந் நிகழ்வானது வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் பா. சிதம்பரராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பாட்டுமன்ற நடுவராக SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் கணினி அறிவியல் பொறியியல் துறையின் உதவிப்பேராசிரியர் க. சண்முகம் அவர்கள் செயல்பட்டார்.

73 ஆண்டுகால சுதந்திரக் காற்றில் உருவான திரை இசைப்பாடல்கள், நம் சமுதாயத்தை சீரழிக்கிறது என்ற அணியில் க. அபிநயசுந்தரி, த. தர்ஷினி, க. சங்கர்பாபு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பாகப் பாடி தங்களது கருத்துக்களை எடுத்து வைத்தனர். மாணவர்கள் பாடியவிதம் அனைவரையும் கவரும் வகையில் அமைந்தன. இறுதியில் நடுவர் அவர்கள், 73 ஆண்டுகால சுதந்திரக்காற்றில் உருவான திரை இசைப் பாடல்கள், நம் சமுதாயத்தை பல பாடல்கள் சீர்படுத்திக் கொண்டும், சில பாடல்கள் சீரழித்துக் கொண்டும் இருக்கின்றன என்று தீர்ப்பளித்தார். இந்நிகழ்வில் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் ம. முருகன் அவர்கள், கல்லூரியின் அலுவலக துணை மேலாளர், துறைத் தலைவர்கள், பல்வேறு துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



## 73வது சுதந்திரதின விழா - நிகழ்வுகள்

நம் SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம் , 73வது சுதந்திரதின விழாவை முன்னிட்டு, 08.08.19 வியாழக்கிழமையன்று மாலை 4.10 மணியிலிருந்து 5.30 மணி வரை நம் கல்லூரியின் மாணவ, மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி, ஓவியப்போட்டி நிகழ்வுகள் நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இன்று(15.08.19) நடைப்பெற்ற 73வது சுதந்திர தின விழா நிகழ்வில் பரிசுகளையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் நம் கல்லூரியின் முதல்வர் துணை முதல்வர் மற்றும் கல்லூரியின் அலுவலக துணை மேலாளர் ஆகியோர் வழங்கிச் சிறப்பித்தனர். மேலும் பாட்டுமன்ற நிகழ்வில் பங்கு பெற்றவர்களையும் பாராட்டி பரிசுகள் வழங்கப்பட்டது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந் நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக நம் கல்லூரியின் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளர் க. சண்முகம் அவர்கள் செயல்பட்டார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.




# பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்

கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம், தமிழ் மொழியின் தொன்மையைம், தமிழ் மரபுகளையும், மற்றும் தமிழரின் வாழ்வியலையும், நம் கல்லூரியின் முதலாம் ஆண்டு தமிழ்மன்ற மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில், தரமணியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடத்தை 31.07.2019 புதன்கிழமையன்று பார்வையிட்டனர். இந்த பயணத்தில் 30 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த தமிழ்ப் பயணத்தில் பழந்தமிழரின் மருத்துவ முறைகள், நீர் மேலாண்மை, மற்றும் பழந்தமிழரின் போரியல் பற்றிய காணொளிகளை கண்டுகளித்தனர். மேலும் பழந்தமிழர்கள் வாழ்க்கை முறைக்கு பயன்படுத்தியப் பொருட்களின் ஓவியங்கள், கலைப் பொருட்கள், சிற்பங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர். இந்த தமிழ்ப் பயணத்தை கல்லூரியின் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளர் க. சண்முகம் அவர்கள் ஒருங்கிணைத்தார்.




## தமிழ்ப்பேரவைத் தொடக்கவிழா

SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளரும், கணினி அறிவியல் பொறியியல் துறையின் உதவிப் பேராசிரியருமான திரு. க. சண்முகம் அவர்கள் செங்கல்பட்டில் அமைந்துள்ள வித்யா சாகர் மகளிர் கல்லூரியில் 30.07.2019 அன்று நடைப்பெற்ற தமிழ்ப் பேரவைத் தொடக்கவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்வைத் தொடங்கி வைத்து, முத்துச்சிதறல் எனும் இதழை வெளியிட்டு சிறப்புரையாற்றினார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.






## பாட்டுமன்றம்

நம் தாய் மொழியாம் தமிழ்மொழியின் மேன்மையைப் பேணிக்காத்து, வளர்த்திடும் வகையிலும், ஆசிரியர்களின் தமிழ் ஆற்றலை வெளிக் கொணரும் வகையிலும் நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம், 13.06.2019 வியாழக்கிழமையன்று மாலை 2.30 மணிமுதல் 4.00 மணிவரை ஆசிரியர்களிடையே, மாணவர்களைப் பண்படுத்துவது அக்காலப் பாடல்களா? இக்காலப் பாடல்களா? என்ற தலைப்பில் பாட்டுமன்றம் நடத்தப்பட்டது. இந் நிகழ்வானது SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர். பா. சிதம்பரராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

பாட்டுமன்ற நடுவராக SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் மின்னணுவியல் தொடர்பியல் துறையின் துறைத்தலைவர் முனைவர். கோமளா ஜேம்ஸ் அவர்கள் செயல்பட்டார். ஆசிரியர்கள் தங்களது இனிமையான குரலில் பழைய மற்றும் புதிய பாடல்களில் உள்ள மாணவர்களைப் பண்படுத்தும்பாடல்களை பாடி அதில் உள்ள கருத்துக்களை எடுத்துவைத்தனர். ஆசிரியர்கள் பாடிய விதம் அனைவரையும் கவரும் வகையில் அமைந்தன. இறுதியில் நடுவர் அவர்கள், மாணவர்களைப் பண்படுத்தும் பாடல்கள் பழையபாடல்களே! என்று தீர்ப்பளித்தார்.



# தமிழ் கலை இலக்கியப் போட்டி- பேச்சுப்போட்டியில் இரண்டாம் இடம்

சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் உள்ள தமிழ்ப் பேரவையின் 133வது நிறைவு விழாவை முன்னிட்டு, அக் கல்லூரியில் 20.03.2019 அன்று நடைபெற்ற தமிழ் கலை இலக்கியப் போட்டிகளில் நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம் முதலாம் ஆண்டு மாணவர் க. சங்கர்பாபு அவர்கள் பங்கேற்று “இரண்டாம் பரிசு” பெற்றுள்ளார் என்பதைப் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவருக்கு பரிசுத் தொகையாக ரூபாய். 3000/- மற்றும் பாராட்டுச் சான்றிதழ் 05.04.2019 அன்று அக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இம் மாணவர்க்கு நம் கல்லூரியின் முதல்வர், துணைமுதல்வர், துறைத்தலைவர் மற்றும் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளர் க. சண்முகம் ஆகியோர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.




## ஆசிரியர்கள் ஆண்டு விழா -2019

SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின், பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம், கல்லூரியில் சிறந்து விளங்கிய ஆசிரியர்களை கௌரவிக்கும் விருது விழா நிகழ்வாக “ஆசிரியர்கள் ஆண்டு விழா -2019” என்ற பெயரில் 28-02-2019 வியாழக்கிழமை அன்று மாலை 2:30 மணியளவில் தொடங்கி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மதுரை தியாகராாச கல்லூரியின் தகைசால் பேராசிரியர் கலைமாமணி முனைவர். கு. ஞானசம்பந்தன் அவர்கள் கலந்துகொண்டு விழாப்பேருரையாற்றினார். அவர் தனது விழா பேருரையில் ஒரு ஆசிரியர் ஆனவர் மாதா பிதாவிற்கு அடுத்தபடியாக போற்றப்படக் கூடியவர் என்றும், அப்பா அம்மா இந்த உறவுகள் எல்லாம் ரத்த சம்பந்தம் என்றும், ஆசிரியர் உறவு தான் ஞான சம்பந்தம் என்றும் தனக்கே உரிய நகைச்சுவை உணர்வோடு எடுத்துரைத்தார். மேலும் தனது உரையில் எழுத்தறிவித்தவன் இறைவன் என்றும் குற்றங்களை களைபவர்

ஆசிரியர் என்றும் கூறினார். நம் நாட்டில் சிறந்து விளங்கிய ஒவ்வொருவருக்கும் ஒருவர் குருவாக இருந்துள்ளார் என்றும் உதாரணமாக உ.வே. சாமிநாதஐயர் அவர்களுக்கு மீனாட்சிசுந்தரம் அவர்கள் குருவாகவும், விவேகானந்தர் அவர்களுக்கு ராமகிருஷ்ணா பரமஹம்சர் குருவாகவும் விளங்கினார்கள் என்று எடுத்துரைத்தார்.

மேலும் கடவுள் ஆக இருந்தால் கூட அவர்களுக்கு நன்னடத்தை சான்றிதழ்களை வழங்க குரு தேவைப்படுகிறார் என்பதைக் கூறி இராமாயணத்தில் ராமனுக்கு திருமணம் நடக்கும் போது சீதையைக் கொடுப்பதற்கு, வில்லை ராமன் உடைத்து இருந்தாலும் கூட சீதையின் தந்தை யோசித்தபோது, ராமனின் குரு தான் அவர்களுக்கு நன்னடத்தை சான்றிதழ் கொடுத்து திருமணம் ஏற்பாடாயிற்று என்பதை மிகவும் நகைச் சுவையோடு எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மதுரை தியாகராச கல்லூரியின் தகைசால் பேராசிரியர் கலைமாமணி முனைவர். கு. ஞானசம்பந்தன் அவர்கள், தனிப் பாடப்பிரிவில் 100% தேர்ச்சி பெற்றவர்கள், புத்தகப் படைப்பாளர்கள், வெளிப்புற நிதியளிக்கும் திட்டத்தின் மூலம் நிதி பெற்றவர்கள், தொழில் நுட்பக் கட்டுரைகளை தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் சம்பர்ப்பித்தவர்கள், ஆசிரியரல்லாத பணிகளில் இருப்பவர்களில் சிறந்து விளங்குபவர்கள் எனப் பல பிரிவுகளில் சிறந்து விளங்கிய ஆசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி கௌவரவித்தார். மேலும் இந்நிகழ்வில் வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் இயக்குனர் முனைவர் தி. பொ. கணேசன் அவர்கள், கல்லூரியின் முதல்வர் முனைவர் பா. சிதம்பரராஜன் அவர்கள் மற்றும் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் ம. முருகன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



## சாரல் தமிழ்மன்றம் - பட்டிமன்றம்

SSN பொறியியல் கல்லூரியின் "சாரல் தமிழ்மன்றம்" 07.03.2019 அன்று நடத்திய பல்வேறு தமிழ் நிகழ்வுகளில், நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம் முதலாம் ஆண்டு மாணவர் க. சங்கர்பாபு அவர்கள் "பேச்சுப்போட்டி" நிகழ்வில் பங்கேற்று 'முதல் இடம்" பெற்றார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இவர் 9.03.2019 அன்று SSN பொறியியல் கல்லூரியில் "சுகிசிவம் ஐயா" அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பட்டிமன்ற நிகழ்வில் பேச தேர்வு செய்யப்பட்டு, "இன்றைய இளைஞர்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவது நாடா? வீடா?" என்ற தலைப்பில் வீடு தான் என்ற அணியில் பேசினார். இந்நிகழ்வில் இவர் "நான்காம் பரிசினைப் பெற்றார் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வெற்றி பெற்ற இம் மாணவர்க்கு நம் கல்லூரியின் முதல்வர், துணை முதல்வர், துறைத் தலைவர் மற்றும் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.








# வழக்காடு மன்றம்

SRM பல்கலைக்கழகத்தின் மாணவ விவாகரங்களின் இயக்ககம் (Directorate of student affairs) impact - 2019 என்ற பெயரில் பல்வேறு கல்லூரிகள் (inter college) மற்றும் SRM பல்கலைக்கழகங்களில் உள்ள பல்வேறு கல்லூரிகளுக்கு இடையே (intra college) 09.2.19 அன்று நடத்திய வழக்காடு மன்ற இறுதிச்சுற்று போட்டி நிகழ்வில் (Debate show) நம் கல்லூரியின் கணினி அறிவியல் பொறியியல் துறையின் உதவிப்பேராசிரியர் க. சண்முகம் அவர்கள் நடுவராகக் கலந்து கொண்டு நிகழ்வை தொடங்கி வைத்து,வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கிய நிகழ்வு.






# பொங்கல் சிறப்பு பட்டிமன்றம்

SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம் மற்றும் YouTube channel -Valliநம் இணைந்து, தமிழர்திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி 09.01.2019 அன்று

பண்டிகைகளை சிறப்பாக கொண்டாடுவது

கிராமப்புறமாணவர்களா?

நகர்ப்புற மாணவர்களா?

என்ற தலைப்பில் பொங்கல் சிறப்பு பட்டிமன்றம் நடத்தப்பட்டது.

இந் நிகழ்வானது வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் பா.சிதம்பரராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பட்டிமன்ற நடுவராக SRM பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்போராயச் செயலர் முனைவர் பா. ஜெயகணேஷ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடுவது கிராமப்புற மாணவர்கள் என்ற அணியில் மு. ஷாமினி, உதவிப்பேராசிரியர் க. சண்முகம் மற்றும் வி. இரமேஷ்அரவிந்த் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பாகப் பேசினர்.

பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடுவது நகர்ப்புற மாணவர்கள் என்ற அணியில் நா. பாலஅபிராமி, உதவிப் பேராசிரியர் தா. இசையரசி மற்றும் க. சங்கர்பாபு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பாக பேசினர். நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக க. சண்முகம் அவர்கள் செயல்பட்டார்.

## பொங்கல் விழாக்கொண்டாட்டம்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற கருத்துக்கு இணையாக தை மாதத்தின் முதல் நாளாக பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது. பொங்கல் என்பது தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா. பொங்கல், உழைக்கும் மக்கள் இயற்கைக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகக் கொண்டாடப்படுகிறது. SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம் மற்றும் YouTube channel - Valliநம் இணைந்து, 09.01.2019 அன்று

பண்டிகைகளை சிறப்பாக கொண்டாடுவது


கிராமப் புறமாணவர்களா? நகர்ப்புற மாணவர்களா?

என்ற தலைப்பில் பொங்கல் சிறப்பு பட்டிமன்றம் நடத்தப்பட்டது. மேலும், YouTube channel - Valliநம் மாணவர்களுக்கென தமிழ் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் வகையில், 11.01.2019 அன்று பானை உடைத்தல், கரும்பு உடைத்தல் மற்றும் கோலப்போட்டி போன்றவை நடத்தப்பட்டன. மாணவர்கள் சிறப்பாக தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். மாணவிகள்

கண்கவரும் வகையில் கிராமிய நடனங்களை நிகழ்த்திக் காட்டினர். மாணவர்கள் தமிழர்களின் பாரம்பரியக் கலையான சிலம்பாட்டம், பறையாட்டம் போன்றவற்றை நிகழ்த்திக் காட்டினர். நிகழ்வின் இறுதியில் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும், சுவையான பொங்கல் மற்றும் கரும்பு ஆகியவை வழங்கப்பட்டன. மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடினர்.

நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக துறை த்தலைவர் ஜெ. ஜெ. மோனிகாபால், உதவிப் பேராசிரியர்கள் மை. சித்ரா, க. சண்முகம் ஆகியோர் செயல்பட்டனர்.





வாழ்க தமிழ் வாழ்க பாரதம்

**தாம்பரம் தமிழ்ச் சங்கம்**

40/8, அகஸ்தியர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை-600 059

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

**கார்த்திகை கற்பகத் தமிழ்**

(பாரதிப் பெருவிழா)

நாள்: விளம்பி ஆண்டு, கார்த்திகை 16, ஞாயிறு (02-12-2018)

நேரம் : மாலை 5.45 மணி முதல் 8.00 மணிவரை

இடம் : வள்ளுவர் குருகுலம்

220, ஜி.எஸ்.டி. ரோடு, மேற்கு தாம்பரம், சென்னை-600 045.

உரையாற்றுபவர்கள்:

செல்வி வெ. பத்ம செளந்தர்யா
சென்னைக் கிறித்தவக் கல்லூரி மாணவி
தலைப்பு : "பாரதி ஒரு தெய்விகக்கவி"

செல்வி பா. சாருமதி
கௌரிவாக்கம் பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி
தலைப்பு : "பாரதி ஒரு தேசியக்கவி"

திரு. க. சங்கர்பாபு
பொத்தேரி வள்ளியம்மை பொறியியல் கல்லூரி மாணவர்
தலைப்பு : "பாரதி ஒரு சமூகக்கவி"

சிறப்புரை: திரு. பாரதி புத்திரன்
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தலைப்பு : "பாரதி என்றொரு மானுடன்"

*அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.*

இவண்,
தாம்பரம் தமிழ்ச் சங்கம், தாம்பரம்

குறித்த நேரத்திற்குள் வர வேண்டுகிறோம்.

தாம்பரம் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராவீர்.

தொடர்புக்கு : த.ராஜகுமார் 9841352030 வ.ச.ஸ்ரீகாந்த் 9841745779 கு.வேங்கடேசன் 9444137799

மின்னஞ்சல் : tambaramtamilsangam@gmail.com



# பாரதியார் பிறந்தநாள் விழா

பாரதியார் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தாம்பரம் தமிழ்ச்சங்கம் சார்பில் 02.12.2018 அன்று நடைபெற்ற விழாவில், நம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்ற உறுப்பினரான முதலாம்ஆண்டு மாணவர் க.சங்கர்பாபு அவர்கள் விருந்தினராக பங்கேற்று "பாரதி ஒரு சமூகக்கவி" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார் என்பதைப் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.




## காணவே வந்தேன் - 2018

உலக எழுத்தறிவு தினத்தையொட்டி வள்ளியம்மை பொறியியல் கல்லூரியில், பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் சார்பாக மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் “காணவேவந்தேன் -2018” என்ற பெயரில்,பல்வேறு கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகளாக கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, பட்டிமன்றம், கவிதைப்போட்டி, சொல் விளையாட்டு போன்ற போட்டிகள் 08.09.18 சனிக்கிழமையன்று நடைபெற்றது.

காணவே வந்தேன்-2018 நிகழ்வானது, வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் இயக்குநரும், எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்தின் தமிழ்பேராயத் தலைவரும்,மற்றும் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் இணைத்துணை வேந்தருமான முனைவர் தி.பொ. கணேசன் ஐயா அவர்கள் வழிகாட்டுதலில்




மற்றும் வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் முதல்வர், முனைவர். பா. சிதம்பரராஜன் அவர்களின் தலைமையில் நிகழ்வானது நடைபெற்றது.

வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் துணை முதல்வர், முனைவர் ம. முருகன் அவர்கள் போட்டிகளின் துவக்க விழாவில் வாழ்த்துரை வழங்கினார்.

இந் நிகழ்வில் சிறப்புவிருந்தினராக அகில இந்திய வானொலி, சென்னையின் மேனாள் இயக்குநரும், மயிலை திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனச் செயலருமான சேவாரத்னா, கலைமாமணி, முனைவர் ந. சேயோன், ஐயா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மேலும் நிகழ்வில், பாரிவேந்தர் மாணவ மன்ற ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் திரு. க. சண்முகம் அவர்கள் அறிமுக உறையாற்றினார். வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் கணினி



அறிவியல் பொறியியல் துறையின் மாணவி ஜெ. தர்ஷினி அவர்கள் வரவேற்புரையாற்றினார். நிகழ்வின் இறுதியாக மாணவி ந.பாலஅபிராமி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இந் நிகழ்வில் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்ற மாணவர்கள் பல்வேறு போட்டிகள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றதன் விவரங்கள் மற்றும் மாணவர்களின் படைப்புகள் அடங்கிய தொகுப்பினை சிறப்புமலராக வெளியிட்டனர்.

இந் நிகழ்ச்சியை சி. ஷாலினி மற்றும் ஜெ. தர்ஷினி ஆகியோர் தொகுத்து வழங்கினர். போட்டி நடுவர்களாக கீழ்க்கண்ட பேராசிரியர்கள் செயல்பட்டனர்.

பட்டிமன்ற போட்டிகளுக்கு நடுவர்களாக மின்னணுவியல் தொலைத் தொடர்புத் துறையின் துறைத்தலைவர் முனைவர். கோமலா ஜேம்ஸ் & கணினி அறிவியல் பொறியியல் துறையின் துறைத் தலைவர் முனைவர் பா. வானதி ஆகியோர் செயல்பட்டனர்.

பேச்சுப் போட்டிகளுக்கு நடுவர்களாக தகவல் தொழில் நுட்பத் துறையின் துறைத்தலைவர் முனைவர் மீனாட்சி & இயற்பியல் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் க. திருப்பதி ஆகியோர் செயல்பட்டனர்.

கட்டுரைப் போட்டிகளுக்கு நடுவர்களாக மின்னனுவியல் தொலைத் தொடர்புத் துறையின் உதவிப்பேராசிரியர் க. செல்வராஜ், இயந்திரவியல் துறையின் உதவிப்பேராசிரியர் க. ஆறுமுகம் & குடிமுறைப் பொறியியல் துறையின் உதவிப்பேராசிரியர் க. வைத்தியநாதன் ஆகியோர் செயல்பட்டனர்.

கவிதைப் போட்டிகளுக்கு நடுவர்களாக மின்னணுவியல் கருவியாக்கம் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் க. அய்யர் & உதவிப்பேராசிரியர் ச. பிரவின்குமார் ஆகியோர் செயல்பட்டனர்.

பரிசு பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு

கவிதைப் போட்டி

| | |
|---|---|
| 1. தமிழொளி | ஸ்ரீ சங்கரா கலை கல்லூரி |
| 2. ராஜலிங்கம். நா | ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி |
| 3. சில்வியா. வி | வள்ளியம்மை பொறியியல் கல்லூரி |

பட்டிமன்றம்

| | |
|---|---|
| 1. கார்த்திக் | ஜெயின் கலைக் கல்லூரி |
| 2. செ.சஞ்சய் | பச்சையப்பா கலைக் கல்லூரி |

பேச்சுப்போட்டி

| | |
|---|---|
| 1. க. சங்கர்பாபு | வள்ளியம்மை பொறியியல் கல்லூரி |
| 2. செ. சஞ்சய் | பச்சையப்பா கலை கல்லூரி |
| 3. ந. இனியன் | சென். ஜோசப் பொறியியல் கல்லூரி |

சொல் விளையாட்டு

| | |
|---|---|
| 1. அனுசுயா. ரா | SRM மருத்துவக்கல்லூரி |
| 2. ஜெயசுதா. செ | SRM மருத்துவக்கல்லூரி |
| 3. ஜெயஸ்ரீ. ரா | ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி |

சொல் விளையாட்டு

1. மைதிலி. ப — வள்ளியம்மை பொறியியல் கல்லூரி
2. சந்தோஷ்குமார். வைவி — வள்ளியம்மை பொறியியல் கல்லூரி
3. வேஷக் ராஷிக் — வள்ளியம்மை பொறியியல் கல்லூரி




கட்டுரைப் போட்டி

1. இரா. அனுசுயா — SRM மருத்துவக் கல்லூரி
2. ம. ஜெயவல்லரசு — அப்பல்லோ கலைக் கல்லூரி
3. கா. சிவபிரகாஷ் — வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

இந் நிகழ்வில் 204 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் உள் கல்லூரியில் இருந்து 110 மாணவ, மாணவிகளும், வெளிக் கல்லூரிகளில் இருந்து 94 மாணவ, மாணவிகளும் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்வின் இறுதியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.




## பேச்சுப்போட்டியில் இரண்டாம் இடம்

தமிழகப் பெண்கள் செயற்களம் ("கலக்க வராங்க, தமிழ் பசங்க") சார்பில் 03.11.2018 அன்று நடைபெற்ற தமிழகப் பண்பாட்டு கலைநிகழ்வில் நடத்தப்பட்டப் பேச்சுப் போட்டியில் நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம் முதலாம் ஆண்டு மாணவர் க. சங்கர்பாபு பங்கேற்று இரண்டாம் பரிசு பெற்றுள்ளார், என்பதைப் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இம் மாணவர்க்கு இந் நிகழ்வில் பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

வெற்றி பெற்ற மாணவர்க்கு நம் கல்லூரியின் முதல்வர், துணை முதல்வர், துறைத் தலைவர் மற்றும் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.




## பேச்சுப்போட்டியில் இரண்டாம் இடம்

டாக்டர் எம். ஜி. ஆர் - ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் மக்கள் தொலைக்காட்சி இணைந்து மாநில அளவில் எம். ஜி. ஆர் மாணவர் விழா - 2018 என்ற பெயரில் கல்லூரி மாணவர்களுக்கு பல்திறன் போட்டிகளை (பேச்சுப் போட்டி, கட்டுரை, கவிதை, ரங்கோலி, ஓவியப் போட்டி) 10.10.2018 புதன்கிழமையன்று நடத்தியது. இதில் நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம் முதலாம் ஆண்டு மாணவர் க. சங்கர் பாபு பங்கேற்று "இரண்டாம் பரிசு" பெற்றுள்ளார் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நிகழ்வில் பேச்சுப் போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இதில் முதல்சுற்றில் இருந்து 15 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் சங்கர்பாபு தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த சுற்றில் 9 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின் மூன்றாம் சுற்றில் இரண்டாவது வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு நம் கல்லூரியின் முதல்வர், துணைமுதல்வர், துறைத் தலைவர் மற்றும் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளர் க. சண்முகம் ஆகியோர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டனர்.




# பேராசிரிய ரத்னா விருது

கவியரசர் கலைத் தமிழ்ச்சங்கம் சார்பில்,ஆசிரியர் தின விழாவையொட்டி நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையின் உதவிப் பேராசிரியர் க. சண்முகம் அவர்களுக்கு, அவரின் கல்வித் தொண்டினைப் பாராட்டி “பேராசிரிய ரத்னா” விருது வழங்கி கௌரவித்துள்ளது என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவருக்கு கல்லூரியின் முதல்வர், துணை முதல்வர், துறைத் தலைவர் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.










## பட்டிமன்ற நிகழ்வு

வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம், நம் தாய் மொழியாம் தமிழ்மொழியின் மேன்மையை பேணிக்காத்து, வளர்த்திடும் வகையிலும், மாணவர்களுக்கு தமிழ் உணர்வை அளிக்கும் வகையிலும் 27.09.2018 வியாழக்கிழமையன்று மாலை 4.00 மணியிலிருந்து 5.00 மணி வரை பட்டிமன்ற நிகழ்வு நடைபெற்றது. இந் நிகழ்விற்கு நடுவராக மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்புத் துறையின் துறைத்தலைவர் முனைவர் கோமளா ஜேமஸ் அவர்கள் செயல்பட்டார்.

பட்டிமன்றத்தலைப்பு:

மாணவர்களின் வாழ்க்கையில் வெற்றிபெற

இளைஞர்களின் மூலம் வரும் செய்திகள் போதுமா?

அனுபவமிக்கவர்களின் ஆலோசனை வேண்டுமா?

என்ற தலைப்பில் மாணவர்கள் சிறப்பாகத் தங்களது கருத்துக்களை எடுத்து வைத்தனர்.




# மாவட்ட அளவில் முதல்இடம்


தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி துறையானது,கல்லூரி மாணவர்களுக்கிடையே, மாவட்ட அளவில் நடத்திய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி நிகழ்வில், பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் சார்பாக, நம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவர் க. சங்கர்பாபு பேச்சுப் போட்டியில் பங்கேற்று முதல் இடம் பெற்றுள்ளார். மேலும் கட்டுரைப் போட்டி நிகழ்வில் முதலாம் ஆண்டு மாணவி ஷெ. தர்ஷினி பங்கேற்று முதலிடம் பெற்றுள்ளார் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவர்களுக்கு பரிசுத் தொகையாக ரூபாய் 10,000 மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை தமிழ்நாடு அரசின், தமிழ் வளர்ச்சித்துறை வழங்கிச் சிறப்பித்து என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, நம் கல்லூரியின் முதல்வர் துணை முதல்வர் மற்றும் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளர் க. சண்முகம் ஆகியோர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.




# வலைவாசல் வருக நூல் வெளியீட்டு விழா

28.03.209 அன்று, SRM கல்விக் குழுமங்களில் ஒன்றான SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் பா. சிதம்பரராஜன் மற்றும் அக் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் க. சண்முகம் அவர்களும் இணைந்து எழுதிய ‘வலைவாசல்வருக’ என்ற தொழில்நுட்ப தமிழ் புத்தகத்தை, வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் இயக்குநர் முனைவர் தி.பொ. கணேசன் அவர்கள் வெளியிட முதல்வர் அவர்கள் பெற்றுக் கொண்டார். இப் புத்தகத்தில் ஒவ்வொரு கணினி அறிவியிலின் தொழில் நுட்பத்தை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், நம்மைச் சார்ந்த, நிகழ்வுகளின் உதாரணங்களுடன் விளக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தரவுப்பகுப்பாய்வு (Data Analytics), மேகக்கணிமை (Cloud Computing), வலையிணைப்புகணிமை (Grid Computing), தரவுச் செயலாக்கம் (Data Mining), இயற்கை மொழியாய்வு (Natural Language

Processing), செயற்கைநுண்ணறிவு (Artificial Intelligence), பொருள்களின் இணையம் (Internet of Things), இளஞ்சித்தரவி (BigData), இயந்திரக்கற்றல் (Machine Learning), படிமச் செயலாக்கம் (Image Processing), மெய்நிகர்த் தோற்றம் (Virtual reality) மற்றும் புனைமெய்யாக்கம் (Augumented Reality), தொடரேடு (Block Chain), மின்வெளி பாதுகாப்பு (Cyber Securtity) மற்றும் தன்னியக்க இயந்திரம் (Autonomous Machine) என இப்போது கணினிதுறையில் உள்ள பல தொழில் நுட்பங்களைப் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. இப்புத்தகம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்குப் பயன்பெறும் வகையில் தமிழிலில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் ம. முருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.




# பொறியறி தொழில்நுட்ப இதழ் வெளியீட்டு விழா

28.03.2019 அன்று, SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் மற்றும் கணித் தமிழ்ப் பேரவை அமைப்பின் மூலம், உருவாக்கப்பட்ட காலாண்டு இதழான பொறியறி என்ற தொழில் நுட்ப இதழ் வெளியிடப்பட்டது. இந்த தொழில் நுட்ப இதழானது, தமிழின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காகவும், கணித்தமிழ் விழிப்புணர்வு அளிக்கும் நோக்கிலும், மாணவர்கள் எளிதில் தொழில் நுட்பங்களை பற்றி தெரிந்துகொள்ளவும், தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தவும், அனைத்துதுறைச் சார்ந்த தொழில் நுட்பச் சொற்கள், தொழில் நுட்பக் கருத்துக்கள், துறைச்சார்ந்த மென்பொருள்களின் செயல்பாடுகள் மற்றும் அதை கணினியில் நிறுவும் முறைகள், அறிவியல் சார்ந்த செய்திகள் ஆகியவற்றை தமிழ் மொழியில் தயார்செய்து உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப இதழை வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் இயக்குநர் முனைவர் தி.பொ. கணேசன் அவர்கள் வெளியிட முதல்வர் முனைவர் பா. சிதம்பரராஜன் அவர்கள் பெற்று க்கொண்டார். இந்நிகழ்வில் கல்லூரியின் துணைமுதல்வர் முனைவர் ம. முருகன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.


# மாணவ மாணவிகளின் படைப்புகள்










ஓவியம்

**P. சுசி வித்யா**

மின்னணுவியல் கருவியாக்கம் துறை






ஓவியம்
**கா. லோக ப்ரியா**
மின்னணுவியல் கருவியாக்கம் துறை

ஓவியம்
**விஷ்ணு பிரியா**
நான்காம் ஆண்டு
மின்னணுவியல் கருவியாக்கம் துறை

# எழுதுகிறேன் விடியலைத் தேடி....

விடியலைத் தேடி ஓடு
நீ விரைந்து வெற்றியைத் தேடு.
இன்று உறங்கிக் கொண்டிருக்கும் உலகத்தை எழுப்பி
உந்தன் வலியைப் பாடு.

காலம் கடந்து சென்றால்
உந்தன் பாரங்கள் நிற்கும் முன்னால்.
அந்த விடியலும், சூழ்நிலைகளும்
உனக்கு எதிரியாய் அமையும் பின்னால்.

விடியலை நெருங்கும்வரை உறங்காதே
இடையூறு எதற்கும் கலங்காதே
விதியின் செயலுக்கு மயங்காதே
உன் மனதின் உறுதியை மறவாதே.

உன் வறுமை காலங்கள் போதும்
உன்னை வருத்திய நிமிடம் போதும்
நீ பின்னே வருகிற ஒளியின் நிழலை,
இன்றே எழுந்து நீ அடையும்.

உன்னை படைத்த இறைவனும் தவறுயில்லை
நீ பிறப்பு எடுத்ததும் தவறுயில்லை
காலத்தின் கொடுமையை அகற்றி விடு
உன் விதியின் கூறுகளை மாற்றி விடு

நீ செல்லும் பாதையில் அச்சம் தவிர்
உன் துன்பத்தை எல்லாம் துடைத்திடுவீர்
இனி வேதங்கள் நான்கையும் படித்துவிடு
உன் விடியலை நீயே திரட்டிவிடு.

வானத்தின் செம்மை கரையும் முன்
திங்கள் முகத்தை காட்டும் முன்
பறவைகள் கூடு சேறும் முன்
தங்கள் வீடு சேறும் எம் நண்பர்கள்

உங்கள் ரசணைக்கு விருந்தாய் பா கூற வந்துள்ளேன்
உணவு வளர்த்து உயிர் வளர்க்கும் உழவுநண்பனோ
உணர்ச்சிப்பா பாடுகிறான் - விடியலைத் தேடி
அண்டை நாடுகள் அடிமைப் படுத்த தம் பண்டைமரபு

சிறப்பு தேடுகிறான் - விடியலைத் தேடி
ஈழப்போரால் நிலத்தை இழந்து தம் பந்தம்
பிரிந்து இறங்கற்பா பாடுகிறாள் - விடியலைத் தேடி
தமிழை மட்டும் மதித்து தமிழனை விரட்டும் புவியிலே

அசுரக்குலத்தவன் ஒடுகிறான் விடியலைத் தேடி
மிருகங்களுக்கு இரையாகும் இறைவிகளை கண்டு
இருளில் வாடுகிறாள் பாரதத்தாய் - விடியலைத் தேடி
ஊழல் எனும் விதை உதிர்ந்து வளர்ந்து நிற்கும் நாட்டிலே

காந்திகளையே நாடுகிறார் சாமானியர் - விடியலைத் தேடி
பாசக்கயிற்றில் சிக்காமல் வறுமை சங்கிலியில் அடைப்பட்ட
எம்மக்கள் சாடுகின்றனர் உம்மையே - விடியலைத் தேடி
அலைகளில் அழியும் சுவடுகள் அல்ல நம் பிறப்பு என் தோழனே!!

ஆழிப்பேரலையே வந்தாலும் எதிர்த்து நில் துணிவாய் இன்று கேள்விகளை கேட்டும் எம் தோழியே பதில்களை ஈன்று மக்கள் மனதில் தெளிவு தருவாய் உன் கண்களை கைகளால் மூடி விடியலை தேடும் சமுதாயமே
ஊமையாக இராமல் உன் கைகளை உயர்த்தி அநீதியுடன் போராடு!

என்றும் இருளே நிழலை மட்டுமே மறைக்கும் என்று
ஏளனமாய் பேசும் தீயவரிடம் கூறு
ஒளி பெற்று வாழும் காலம் வெகுதூரம் இல்லை
ஓங்கி நிற்கும் உன் புகழ் வாழ!
எழுதுகிறேன் விடியலை தேடி....

**ஞா. பாலாஜி**
நான்காம் ஆண்டு
மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை.

# தாய்

கடவுளிடம் சென்று வேண்டினால் தான்
செய்வார் எதையும் ஆனால்
நீ மனதில் நினைத்தாலே போதும்
எதையும் செய்பவள்தான் தாய்...!
உலகத்தைப் படைத்தது கடவுள் ஆனால்
உன்னைப் படைத்தது தாய்...!
கடவளைக் கண்ணில் காணமுடிவதில்லை
என்று சிலர் வருந்துவார்கள் ஆனால்
தன்முன் உள்ள கடவுளை
நினைக்கக் கூடமாட்டார்கள்
அவள்தான் தாய்...!

**எம். சண்முகசுந்தரி**
மூன்றாம் ஆண்டு
மின்னணுவியல் கருவியாக்கம் துறை

# விடாமுயற்சி

கொலம்பஸின் முயற்சி அமெரிக்காவை கண்டுபிடித்தது!
இராபர்ட் புரூஸின் முயற்சி ஸ்காட்லாண்டை மீட்டுத்தந்தது
தெருவிளக்கின் கீழ் நின்று படித்த முத்துசாமி ஐயரின்
முயற்சி அவரை நீதிபதி ஆக்கியது !
அம்பேத்கரின் முயற்சி
இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தை தந்தது!
விறகு வெட்டியின் மகனாகப் பிறந்த ஆப்ரகாம் லிங்கனின் முயற்சி
அவரை அமெரிக்காவின் குடியரசுத்தலைவர் ஆக்கியது
ஆம்!
இவர்களெல்லாம் விடாமுயற்சியின்
விளையாட்டுப்பிள்ளைகள்!
விதியென்று வீழ்ந்து கிடந்த மனிதன்
விமானம் படைக்கவில்லையா?
ராகுகாலம் பார்த்த மனிதன்
இராக்கெட் விடவில்லையா?
நிலவுகாட்டி சோறூட்டிய மனிதன்
நிலவிற்கே சென்று சாப்பிட முயலவில்லையா?
இதயம் நிறைய முயற்சி இருந்தால்
இமயத்தைக் கூட தோளில் சுமக்கலாம்!

**க. கார்த்திகா**
இரண்டாம் ஆண்டு
மின்னணுவியல் தொலைத்தொடர்புத்துறை

# தொழில்நுட்ப ஆங்கில வார்த்தைகளுக்கு இணையான தமிழ் வார்த்தைகள்

| | |
|---|---|
| Analog | - உவமம் |
| Digital | - துடிமம் |
| Computer | - கணிபொறி |
| CPU | - மையச் செயலகம் |
| Memory | - நினைவகம் |
| Keyboard | - விசைப்பலகை |
| Monitor | - திரையகம் |
| Mouse | - சுட்டி, சொடுக்கி |
| Floppy Disk | - நெகிழ்வட்டு |
| Hard Disk | - நிலைவட்டு |
| Compact Disk | - குறுவட்டு |
| Disk Drive | - வட்டகம் |
| Printer | - அச்சுப்பொறி |
| Inkjet Printer | - மைஅச்சுப் பொறி |
| Dot Matrix Printer | - புள்ளி அச்சுப்பொறி |
| Laser Printer | - ஒளியச்சுப் பொறி |
| Ploter | - வரைவு பொறி |
| Scanner | - வருடு பொறி |
| Modem | - இணைக்கி |
| Input | - உள்ளீடு |
| Output | - வெளியீடு |
| Network | - பிணையம் |
| Internet | - இணையம் |
| WWW | - வைய விரிவலை |
| Website | - வலையகம் |
| Portal | - வலைவாசல் |
| Webpage | - வலைப்பக்கம் |
| Webcasting | - வலைபரப்பு |

| | |
|---|---|
| Netizen | - வலைவாசி |
| Browser | - உலாவி |
| Server | - புரவன் |
| Client | - கிளையன் |
| Terminal | - முனையம் |
| Workstation | - பணி நிலையம் |
| Node | - கணு |
| Search Engine | - தேடு பொறி |
| E-mail | - மின் அஞ்சல் |
| E-Commerce | - மின் வணிகம் |
| Download | - பதிவிறக்கம் |
| Upload | - பதிவேற்றம் |
| Encryption | - மறையாக்கம் |
| Decryption | - மறைவிலக்கம் |
| Hackers | - ஊடுருவிகள் |
| E-Cash | - மின்பணம் |
| IT | - தகவல் தொழில்நுட்பம் |
| Text | - உரை |
| Graphics | - வரைகலை |
| Sound | - ஒலி |
| Audio | - கேட்பொலி |
| Video | - நிகழ்படம் |
| Photo | - நிழற்படம் / ஒளிப்படம் |
| Microprocessor | - நுண்செயலி |
| ROM | - அழியா நினைவகம் |
| RAM | - நிலையா நினைவகம் |
| Mother Board | - தாய்ப்பலகை |
| Expansion Slot | - விரிவாக்கச் செருகுவாய் |
| Animation | - நகர்படம் |
| Motion capture | - அசைவுப்பதிவு |
| Wire freame | - வலைப்புள்ளிச்சித்திரம் |
| Rendering | - உருப்பெருதல் |

| | |
|---|---|
| Texture | - புறத்தோற்றம் |
| Multimedia | - பல்லூடகம் |
| Data | - விவரம் / தகவல் |
| Column | - நெடுவரிசை |
| Row | - கிடைவரிசை |
| Table | - அட்டவணை |
| Data Base | - தகவல் தளம் |
| Word Processor | - சொல் செயலி |
| Spread Sheet | - விரிதாள் |
| Operating System | - இயக்க முறைமை |
| Platform | - பணித்தளம் |
| GUI | - வரைகலைப் பணிச்சூழல் |
| User | - பயனாளர் / பயனாளி /பயனர் Password - நுழைசொல் |
| Application Package | - பயன்பாட்டுப் பணித்தொகுப்பு திவீறீமீ - கோப்பு |
| Document | - ஆவணம் |
| Directory | - கோப்பகம் |
| Folder | - கோப்புறை |
| Variable | - மாறி |
| Constant | - மாறிலி |
| Instruction | - ஆணை |
| Command | - கட்டளை |
| Program | - செயல்வரைவு |
| Function | - செயல்கூறு |
| Interpreter | - ஆணைமாற்றி |
| Compiler | - மொழிமாற்றி |
| Translator | - மொழிபெயர்ப்பி |
| Binary Language | - இரும மொழி |
| Window | - சாளரம் |
| Menu | - பட்டியல் |
| Icon | - சின்னம் / குறும்படம் |
| Font | - எழுத்துரு |
| Erase | - அழி |

| | |
|---|---|
| Delete | - நீக்கு |
| Remove | - அகற்று |
| Format | - வடிவமை / அழகமை |
| Virtual | - மெய்நிகர் |
| Virtual Reality | - மெய்நிகர் நடப்பு |
| Artificial Intelligence | - செயற்கை நுண்ணறிவு |
| Remote Control | - தூர இயக்கி |
| CD Player | - இறுவட்டு இயக்கி |

**க. சண்முகம்**
உதவிப்பேராசிரியர்
கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை
வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

# SRM வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

(தன்னாட்சி கல்லூரி)

எஸ்.ஆர்.எம் நகர், காட்டாங்குளத்தூர் - 603 203

# பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம்

வழங்கும்







## காணவே வந்தேன் - 2019

நிகழ்வு நடைபெறும் நாள் : 14-09-2019

## நடைபெறும் போட்டிகள்

- பட்டிமன்றம்
- பேச்சுப்போட்டி
- கட்டுரைப்போட்டி
- கவிதைப்போட்டி
- சொல்விளையாட்டு



**சிறப்பு விருந்தினர் நாவுக்கரசர்**

**உயர்திரு 'நாஞ்சில் சம்பத்'**

**அவர்கள், இலக்கியப்பேச்சாளர்**

பதிவுக்கட்டணம் : ரூ. 150

பதிவிற்கு கடைசி நாள் : 09-09-2019

உள் கல்லூரி & வெளிக்கல்லூரி மாணவர்களுக்கென தனித்தனியே பரிசுகள் வழங்கப்படும்

பதிவிற்கு மின்னஞ்சல் முகவரி
vecpvmtamilmandram@valliammai.co.in

வள்ளியம்மை பொறியியல் கல்லூரி
பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம்

தொடர்புக்கு
9715366091, 8760618905

## அமெரிக்காவில் உள்ள ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் தமிழுக்குத் தனி இருக்கை அமைப்பதற்கு அதிக நிதியளித்த நம் கல்லூரியைப் பாராட்டும் நிகழ்வு




சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்தநாள் விழா - பேச்சுப் போட்டியில் மாநில அளவில் நான்காம் பரிசு பெறும் *SRM* வள்ளியம்மை பொறியியல் கல்லூரி மாணவர் கா. சங்கர்பாபு - மேதகு ஆளுநர் அவர்களிடம் பாராட்டுச் சான்றிதழ் பெறும் நிகழ்வு

